# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2027/1 - 2017 ජූලි මස 10 වැනි සඳුදා - 2017.07.10

*2027/1 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் அறிவித்தல்**

இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வருமான வரிகளை செலுத்தாது தட்டிக்கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பின்லாந்து குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் 2016.10.06 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட, இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு 2016.12.10 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட பிரேரனை ஒன்றின் மூலம் பராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 9.7 (1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்க,
செயலாளர்,
நிதி மற்றும் ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2017, யூலை 07.

**வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பின்லாந்து குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கமும் பின்லாந்து குடியரசு அரசாங்கமும், வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் கீழே தரப்பட்டுள்ளவாறு உடன்பாடு கண்டுள்ளன;


1A-G25876 - 57 (2017/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கவனிக்க.**- 2026/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 2026/58 ஆகும்.

**உறுப்புரை 1**

*உள்ளடக்கப்படும் ஆட்கள்*

*ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் வதியும் ஆட்களின் மீது இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.*

**உறுப்புரை 2**

*உள்ளடக்கப்படும் வரிகள்*

*1. ஒப்பந்த அரசு ஒன்றின் அல்லது அதன் உள்ளூர் அதிகாரசபைகளின் சார்பில் விதிப்பனவு செய்யப்படும் வருமானம் மீதான வரிகள் தொடர்பில், அவை அறவிடப்படும் முறைகளைக் கவனத்தில் கொள்ளாது இவ் ஒப்பந்தம் ஏற்புடையதாகுதல் வேண்டும்.*

*2. அசையும் மற்றும் அசையா ஆதனங்களுடன் தொடர்பில்லாதவற்றிலிருந்து பெறப்படும் சம்பாத்தியங்கள் மீதான வரிகள் அவ்வாறே மூலதன விரிவாக்கம் மீதான வரிகள் உள்ளடங்கலான, மொத்த வருமானத்தின் மீது அல்லது அதன் ஒரு பகுதியின் மீது விதிப்பனவு செய்யப்படும் அனைத்து வரிகளும் வருமானத்தின் மீதான வரிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*3. ஏற்புடையதாகும் இவ் ஒப்பந்தத்தில் தற்போது நடைமுறையிலுள்ள வரிகளாவன;*

*(அ) பின்லாந்தில்*

(i) *அரச வருமான வரிகள்*
(ii) *நிறுவன வருமான வரி*
(iii) *கூட்டுடமையான வரி*
(iv) *தேவாலய வரி*
(v) *வட்டியிலிருந்தான மூலத்தில் நிறுத்தி வைத்தல் வரி*
(vi) *வதிவில்லா வருமானத்தில் நிறுத்தி வைத்த வரி*

*(இதனகத்துப் பின்னர் "பின்லாந்து வரிகள்" என அழைக்கப்படும்.)*

*(ஆ) இலங்கையில்*

*முதலீட்டு சபையுடன் உடன்படிக்கைகளினை மேற்கொண்டுள்ள தொழில்முயற்சிகளின் புரள்வின் அடிப்படையிலான வருமான வரி உள்ளிட்ட வருமான வரி.*

*(இதனகத்துப் பின்னர் "இலங்கை வரி" என அழைக்கப்படும்.)*

*4. தற்போது நடைமுறையிலுள்ள வரிகளுக்கு மேலதிகமாக அல்லது அவற்றிற்குப் பதிலாக இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியின் பின்னர் வருமானத்தின் மீது விதிப்பனவு செய்யப்படும் ஏதேனும் அதற்குச் சமமான அல்லது பெருமளவில் சமமான வேறு ஏதேனும் வரிகள் தொடர்பிலும் இவ் ஒப்பந்தம் ஏற்புடையாகுதல் வேண்டும். ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தங்களது வரி விதிப்பனவுச் சட்டங்கள் தொடர்பில் செய்ய வேண்டிய முக்கிய மாற்றங்கள் தொடர்பில் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் அறியச் செய்து கொள்ளுதல் வேண்டும்.*

**உறுப்புரை 3**

*பொது வரைவிலக்கணங்கள்*

*1. இவ் ஒப்பந்த நோக்கங்களுக்காக, சொல்லமைவின்படி வேறுவிதமான கருத்து தேவைப்பட்டாலன்றி,*

*(அ) 'பின்லாந்து' என்ற சொல் பின்லாந்து குடியரசினைக் குறிக்கும். அதேவேளையில், புவியியல் ரீதியில் நோக்குமிடத்து, 'பின்லாந்து' என்ற சொல் அதன் கடற் பிரதேசம், கடல் அடித்தளம், கரையோர கடற் பிரதேசங்களின் நிலக்கீழ் மண் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கும் ஒப்பந்தங்களுக்கும் இணங்க, இயற்கை வளங்களை அல்லது மேற்குறிப்பிட்ட பிரதேசங்களை ஆய்வு செய்வதற்கு போலந்து தனது இறைமை உரிமைகளைப் பிரயோகிக்கக் கூடிய உள்நாட்டுக் கடல் எல்லைகளுக்கு வெளியில் அமைந்துள்ள பிரதேசங்களையும் குறிக்கும்.*

(ஆ) "இலங்கை" என்ற சொல் சர்வதேச சட்டத்திற்கும் அதன் தேசிய அரசியலமைப்புக்களுக்கும் இணங்க, இலங்கை தனது இறைமை உரிமைகளையும் நீதிமன்ற நியாயாதிக்கத்தினையும் அமுல்படுத்துகின்ற அல்லது இதற்குப் பிறகு அமுல்படுத்தும் சாத்தியமுள்ள அதன் நிலப் பிரதேசம், உள்ளக நீர் நிலைகள், அரசுக்குச் சொந்தமான கடற் பிரதேசம், அதற்கு மேல் அமைந்துள்ள வான்வெளி என்பனவும் பிரத்தியேக பொருளாதார வலயம், கண்டமேடை என்பனவும் உள்ளிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்குச் சொந்தமான எல்லைகளைக் குறிக்கும்.

(இ) 'ஆள்' என்ற சொல் தனியாள் ஒருவரை, கம்பனியொன்றை, ஆட்களின் குழுவொன்றினைக் குறிக்கும்.

(ஈ) 'கம்பனி' என்ற சொல் கூட்டிணைக்கப்பட்ட சபை ஒன்றை அல்லது வரி நோக்கங்களுக்காக கூட்டிணைக்கப்பட்ட சபையாக கருதப்படுகின்ற ஒன்றைக் குறிக்கும்.

(உ) 'ஒப்பந்த அரசு' மற்றும் 'மற்றைய ஒப்பந்த அரசு' என்ற வாசகங்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பின்லாந்து அரசு மற்றும் இலங்கை அரசைக் குறிக்கும்.

(ஊ) 'ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில்முயற்சி' மற்றும் 'மற்றைய ஒப்பந்த அரசின் தொழில்முயற்சி' என்ற ஊகங்கள் முறையே ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில்முயற்சியினையும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில்முயற்சியினையும் குறிக்கும்

(எ) 'நாட்டவர்' என்ற சொல்

(i) ஒப்பந்த அரசு ஒன்றின் பிரசாவுரிமையினைப் பெற்றுள்ள ஆள் ஒருவரையும்

(ii) ஒப்பந்த அரசு ஒன்றில் நடைமுறையிலுள்ள சட்டத்தினூடாக குறித்த சட்ட அந்தஸ்தினைப் பெறுகின்ற சட்ட ரீதியான ஆள் ஒருவரை அல்லது பங்குடமை வியாபாரம் ஒன்றினை அல்லது கம்பனி ஒன்றினைக் குறிக்கும்.

(ஏ) 'சர்வதேச போக்குவரத்து' என்ற சொல் ஒப்பந்த அரசு ஒன்றில் அமைந்துள்ள தொழில்முயற்சி ஒன்றினால் இயக்கப்படுகின்ற கப்பல் அல்லது விமானம் ஒன்றின் மூலம், அக்கப்பல் அல்லது அவ் விமானம் மற்றைய ஒப்பந்த அரசின் நிலையங்களுக்கிடையில் மாத்திரம் நடாத்துகின்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த எந்தவொரு போக்குவரத்தினையும் குறிப்பிடும்.

(ஐ) 'தகவுடைய அதிகாரி' என்ற வாசகம்,

(i) பின்லாந்து தொடர்பில், நிதி அமைச்சு அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது நிதி அமைச்சின் அதிகாரம் பெற்ற ஒருவரினை, தகவுடைய அதிகாரியாக குறிக்கும்.

(ii) இலங்கையின் விடயத்தில், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினையும் அல்லது ஆணையாளர் நாயகத்தின் அதிகாரம் பெற்ற முகவரையும் குறிக்கும்.

(ஒ) "வரி" என்ற சொல் தேவைக்கேற்ப இலங்கை வரியை அல்லது பின்லாந்து வரியினைக் குறிக்கும். எனினும், இந்த ஒப்பந்தம் ஏற்புடையதாகும் வரிகளுடன் தொடர்புடைய ஏதேனும் தட்டிக் கழிப்புக்கள் அல்லது கழிப்பனவுகள் தொடர்பில் செலுத்த வேண்டிய ஏதேனும் ஒரு தொகை அல்லது இவ்வரிகளுடன் தொடர்புடைய வகையில் விதிக்கப்பட்ட ஏதேனுமொரு தண்டனையினைப் பிரதிநிதித்துவம் செய்யும் தொகை இதில் உள்ளடங்க மாட்டாது.

*2.* ஒப்பந்த அரசு ஒன்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ் ஒப்பந்தத்தினை ஏற்புடையதாக்குகையில், இதில் வரைவிலக்கணம் கூறப்படாத ஏதேனும் ஒரு சொல்லை, அதன் சொல்லமைவின்படி வேறுவிதமாக பொருள் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தாலேயன்றி, இவ் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய வரி நோக்கங்களுக்காக, அவ் அரசின் சட்டத்தின் கீழ், அச்சந்தர்ப்பத்தில் கொண்டுள்ள கருத்தையே கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அவ் அரசில் நடை முறையிலுள்ள வரிச் சட்டங்களின் கீழ் அச் சொல் கொண்டுள்ள கருத்தைவிட விஞ்சி ஏற்புடையாகுதல் வேண்டும்.

**உறுப்புரை *4***

வதிபவர்

*1.* இவ் ஒப்பந்த நோக்கங்களுக்காக, 'ஒப்பந்த அரசில் வதிபவர்' என்ற வாசகம், அவ் அரசின் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள் ஒருவரின் நிரந்தர வதிவு, வதிவிடம், முகாமை நிலையம், சட்ட ரீதியான நிலையம் அல்லது அத்தகைய தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் அளவுகோல்களின் காரணமாக அவ் அரசு அடங்கலாக அந்நாட்டின் சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டிய ஒரு நபரைக் குறிப்பிடுவதுடன், அவ் அரசும் அதன் ஏதேனும் அரசியல் உப பிரிவும் அல்லது உள்ளூர் அதிகாரசபையும் அதில் அடங்கும்.

எவ்வாறாயினும், அவ் அரசின் மூலங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்கள் தொடர்பில் மாத்திரம் அவ் அரசில் வரி விதிக்கப்படும் எவரேனும் நபரை இவ்வாசகம் குறிக்கமாட்டாது.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எவரேனும் ஆள் ஒருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருக்குமிடத்து, அவரின் நிலை தொடர்பில் கீழே உள்ளவாறு தீர்மானித்தல் வேண்டும்.

(அ) அவருக்கு நிரந்தர வதிவிடம் உள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுவார்; மேலும், அவருக்கு இரு அரசுகளிலும் நிரந்தர வசிப்பிடம் காணப்படுமாயின், அவருக்கு மிகவும் நெருக்கமான தனிப்பட்ட மற்றும் பொருளாதார தொடர்புகள் காணப்படுகின்ற (அவரது மிக முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள) அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) அவரது மிகவும் முக்கியமான தொடர்புகளின் மத்திய நிலையமாகவுள்ள அரசினைத் தீர்மானிக்க முடியாதவிடத்து, அல்லது ஒரு அரசிலேனும் அவருக்கு நிரந்தர வதிவிடம் எதுவும் காணப்படாதவிடத்து, அவர் வழமையாக வதியும் வதிவிடமுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) அவருக்கு இரண்டு அரசுகளிலும் வழமையாக வதியும் வதிவிடங்கள் காணப்படுமிடத்து, அல்லது ஒன்றிலேனும் அவ்வாறான ஒன்று காணப்படாதவிடத்து, அவர் நாட்டினதாகவுள்ள அரசில் மாத்திரம் அவர் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) அவர் இரு அரசுகளிலும் நாட்டினத்தவராக இருப்பின் அல்லது அவற்றில் ஒன்றிலேனும் நாட்டினத்தவராக இல்லாதவிடத்து, இவ்விடயத்தினை ஒப்பந்த அரசுகளின் தகவுடை அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் காரணமாக தனியாளொருவர் அல்லாத ஆளொருவர் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வதிபவராக இருப்பின், அதன் செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசில் மாத்திரம் வதிபவராக கருதப்படுதல் வேண்டும். செயற்பாட்டு முகாமை நிலையம் அமைந்துள்ள அரசைத் தீர்மானிக்க முடியாதவிடத்து, இவ்விடயத்தினை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**உறுப்புரை 5**

*நிரந்தர தாபனம்*

1. இவ் ஒப்பந்தத்தின் நோக்கங்களுக்காக 'நிரந்தர தாபனம்' எனும் சொல் தொழில்முயற்சியொன்றின் வியாபாரச் செயற்பாடுகள் முழுமையாக அல்லது பகுதியாக கொண்டு நடாத்தப்படும் நிலையான வியாபார நிலையத்தினைக் குறிக்கும்.

2. 'நிரந்தர தாபனம்' எனும் சொல் குறிப்பாக பின்வருவனவற்றினையும் உள்ளடக்கும் :

(அ) முகாமை நிலையம்
(ஆ) கிளை
(இ) அலுவலகம்
(ஈ) தொழிற்சாலை
(உ) வேலைத்தளம்
(ஊ) சுரங்கங்கள், எண்ணெய் அல்லது வாயுக் கிணறுகள், கற்குழிகள் அல்லது இயற்கை வளத்தை மாற்றீடு செய்யும் வேறு ஏதேனும் இடங்கள்.

3. இவ்வாறு 'நிரந்தர தாபனம்' எனும் சொல் பின்வருவனவற்றினையும் உள்ளடக்கும்:

(அ) கட்டிட வேலைத்தளம், நிருமாணம், ஒன்று சேர்க்கும் அல்லது பொருத்தும் கருத்திட்டங்கள், இயற்கை வளங்களைக் கண்டுபிடித்தல் அல்லது அபிவிருத்தி செய்தலுக்காகப் பயன்படுத்தப்படும் தோண்டு மேடை அல்லது கப்பல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய மேற்பார்வை செயற்பாடுகள் அடங்கலாக எனினும், அவ்வேலைத்தளம் அல்லது கருத்திட்டம் அல்லது அதன் செயற்பாடுகள் ஏதேனும் பன்னிரண்டு மாத காலப்பகுதி ஒன்றினுள் 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப்பகுதி மேல் தொடருமாயின் மாத்திரம்.

(ஆ) ஒரு தொழில் முயற்சி மேற்படி நோக்கங்களுக்காக ஊழியர்களை அல்லது வேறு ஆளணியினரைப் பயன்படுத்தி உசாவுதல் சேவை அடங்கலான சேவைகளை வழங்குதல் எனினும், அத்தகைய தன்மையினைக் கொண்ட செயற்பாடுகள் நாட்டின் உரிய நிதியாண்டு ஆரம்பிக்கும் அல்லது பூர்த்தியாகும் ஏதேனும் பன்னிரண்டு மாத கால எல்லையினுள் மொத்தமாக 183 நாட்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் தொடருமாயின் மாத்திரம்.

4. இவ் உறுப்புரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது, 'நிரந்தர தாபனம்' எனும் சொல் பின்வருவனவற்றினை உள்ளடக்க மாட்டாது என்பதனைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் :-

(அ) தொழில்முயற்சியொன்றுக்குரிய பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் அல்லது காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டும் வசதிகளைப் பயன்படுத்துதல்.

(ஆ) களஞ்சியப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்துதல் நோக்கத்திற்காக மாத்திரம் தொழில்முயற்சியொன்றுக்குச் சொந்தமான பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல்.

(இ) வேறொரு தொழில்முயற்சியின் தயாரிப்பு நோக்கத்திற்காக மாத்திரம் தொழில்முயற்சியொன்றுக்குரிய பொருட்களின் அல்லது வணிகப் பொருட்களின் கையிருப்பு ஒன்றினைப் பேணுதல்.

(ஈ) தொழில்முயற்சியொன்றுக்கான பொருட்களை அல்லது வணிகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்காக மாத்திரம் நிலையான வியாபாரமொன்றினை நடாத்துதல்.

(உ) தொழில்முயற்சியொன்றுக்கான பூர்வாங்க அல்லது துணைத்தன்மையினைக் கொண்ட வேறு ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக மாத்திரம் நிலையான வியாபார நிலையமொன்றினை நடாத்துதல்.

(ஊ) (அ) முதல் (உ) வரையிலான உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நோக்கங்களின் தொகுதியொன்றினை மேற்கொள்வதற்காக மாத்திரம் நிரந்தர வியாபார நிலையமொன்றினைக் கொண்டு நடாத்துமிடத்து, அவை அந்நோக்கங்களுக்கான பூர்வாங்க அல்லது துணைத்தன்மையினைப் பெறுதல்.

5. 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள முகவரொருவரைத் தவிர, எவரேனும் ஆளொருவர் ஒப்பந்த அரசு ஒன்றில் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில்முயற்சியொன்றுக்காகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில்,

(அ) அவ் ஆளின் செயற்பாடுகள் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குள் வரையறுக்கப்பட்டதாகவும், நிரந்தர தாபனம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்படுமாயின், அந் நிரந்தர வியாபார நிலையம் அப் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நிரந்தர தாபனம் ஒன்றாக கருதப்படாததுமான செயற்பாடாக இருந்தாலேயன்றி, தொழில்முயற்சியின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு அதிகாரம் பெற்ற அவ் ஒப்பந்த அரசில் அவ் அதிகாரத்தை ஒரு வழக்கமாக செயற்படுத்தக் கூடிய ஆளொருவராக; அல்லது

(ஆ) அவ்வாறான அதிகாரம் இல்லாதவிடத்தும், முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் வழக்கமான முறையில் கொண்டு நடாத்துகின்ற அத் தொழில்முயற்சிக்குச் சொந்தமான பொருட்கள் அல்லது வணிகப் பொருள் கையிருப்பு ஒன்றின் மூலம் தொழில்முயற்சியின் சார்பில் பொருட்கள் அல்லது வணிகப் பொருட்களை விநியோகிக்கின்ற ஆளொருவராக;

இருப்பாராயின், 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது அவ் ஆள் தொழில்முயற்சியின் சார்பில் பொறுப்பேற்கும் ஏதேனும் செயற்பாடுகள் தொடர்பில் அத்தொழில்முயற்சிக்கு முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் நிரந்தர தாபனம் ஒன்று காணப்படுவதாக கருதப்படுதல் வேண்டும்.

6. மறு காப்புறுதி தொடர்பில் அன்றி, ஒப்பந்த அரசு ஒன்றின் காப்புறுதி தொழில்முயற்சியொன்று 7 ஆம் பந்தி ஏற்புடையதாகும் சுதந்திர நிலையிலுள்ள பிரதிநிதி ஒருவரைத் தவிர, வேறு ஆளொருவர் ஊடாக மற்றைய ஒப்பந்த அரசின் நிலப் பிரதேசத்தினுள் தவணைப் பணம் சேகரிப்பாராயின், அல்லது அந்த நிலப் பிரதேசத்தினுள் காணப்படும் இழப்பு அபாயங்களைக் காப்புறுதி செய்யுமாயின், இவ் உறுப்புரையின் முன் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது அதற்கு மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தர தாபனம் ஒன்று உள்ளது எனக் கருதுதல் வேண்டும்.

7. மேற்குறித்த சாதாரண நடைமுறைகளுக்கு இணங்கச் செயற்படும் தரகர் ஒருவர் சாதாரண தரகு முகவர் அல்லது சுயாதீன நிலையினைக் கொண்ட வேறு எவரேனும் முகவர் ஒருவரினூடாக ஒப்பந்த அரசு ஒன்றில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற காரணத்தினால் மாத்திரம் அவ் அரசினுள் மற்றைய ஒப்பந்த அரசின் நிரந்தரத் தாபனம் ஒன்று காணப்படுவதாக கருதக் கூடாது.

எவ்வாறாயினும், அத்தகைய முகவர் ஒருவரின் செயற்பாடுகள் அத்தொழில் முயற்சியின் சார்பில் முழுமையாக அல்லது பிரதானமாக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற போது முகவருக்கும் தொழில் முயற்சிக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்புகளற்ற ஆட்கள் மத்தியில் நடைபெறும் முறையிலான நிபந்தனைகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதில்லை எனக் கூறப்பட்டிருப்பின், இப்பந்தியின் கருத்தின்படி அவர் சுதந்திர நிலையிலுள்ள ஒரு முகவராக கருதப்படக் கூடாது.

8. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் கம்பனியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்றினை நிருவகித்தல் அல்லது அத்தகைய கம்பனியொன்றினால் நிருவகிக்கப்படுதல் (நிரந்தர தாபனம் ஒன்றினூடாக அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையில்) அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரத்தினை மேற்கொள்வதனால் மாத்திரம் ஒரு கம்பனி மற்றையதன் நிரந்தர தாபனமாக அமையமாட்டாது.

**உறுப்புரை 6**

அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம்

1. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவர் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள (விவசாயம் மூலமாக அல்லது பயிர்ச்செய்கையின் மூலமாக கிடைக்கும் வருமானம் அடங்கலாக) அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

2. "அசையா ஆதனங்கள்" எனும் வாசகம் சர்ச்சைக்குரிய ஆதனம் அமைந்துள்ள அரசின் சட்டத்தின் கீழ் அவ்வாசகம் கொண்டுள்ள கருத்திலேயே காணப்படுதல் வேண்டும். எத்தகைய சந்தர்ப்பத்திலும் இவ்வாசகம் உள்ள அசையா ஆதனங்களில் அடங்கும் ஆதனங்கள், கால்நடைகள் மற்றும் விவசாயத்தின் போதும் காடாக்கத்தின் போதும் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், காணிகள் மற்றும் சொத்துகள் தொடர்பில் சாதாரண சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும். உரிமைகள், அசையா ஆதனங்களின் ஆட்சியுரிமை, கனிப்பொருட் படிமங்கள், மூலங்கள் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் தொடர்பில் வேலை செய்வதற்கு அல்லது வேலை செய்வதற்கான உரிமைக்கான மாற்றமடையக் கூடிய அல்லது நிலையான கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும். அத்துடன் கப்பல்கள் மற்றும் விமானங்கள் என்பன அசையா ஆதனங்களாக கருதப்படுதல் கூடாது.

3. அசையா ஆதனங்களை நேரடியாகப் பயன்படுத்துதல், வாடகைக்கு விடுதல் அல்லது வேறு ஏதேனும் முறையில் பயன்படுத்துதல் என்பனவற்றின் மூலம் கிடைக்கும் வருமானங்களுக்கும் இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையாகுதல் வேண்டும்.

4. கம்பனியொன்றின் பங்குகளை அல்லது வேறு ஏதேனும் கூட்டிணைப்பு உரிமைகளைக் கொண்டிருப்பது, அக்கம்பனியின் அசையாச் சொத்துக்களை அனுபவிப்பதற்கான உரிமையை அப்பங்குகளின் அல்லது கூட்டிணைப்பு உரிமைகளின் உரிமையாளருக்கு வழங்குகின்ற சந்தர்ப்பத்தில், அசையாச் சொத்தை நேரடியாகப் பயன்படுத்துவதன் மூலம், வாடகைக்கு வழங்குவதன் மூலம், அல்லது வேறு ஏதேனும் விதத்தில் அவ் உரிமையைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மீது அவ் அசையாச் சொத்து அமைந்துள்ள ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

5. 1 ஆம் 3 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏதேனும் தொழில்முயற்சிகளின் அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும், சுதந்திர தனிப்பட்ட சேவைகளை மேற்கொண்டு பயன்படுத்தும் அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

**உறுப்புரை 7**

வியாபார இலாபங்கள்

1. ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனம் ஒன்றினூடாக மற்றைய ஒப்பந்த அரசில் வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதாயின் மாத்திரமே அவ் ஒப்பந்த அரசினால் அத்தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது வரி விதிப்புச் செய்ய முடியும். தொழில்முயற்சியை மேலே குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்வதாயின் தொழில் முயற்சியின் இலாபங்கள் மீது மற்றைய அரசினால் வரி விதிக்க முடியுமாயினும், அது நிரந்தர தாபனத்திற்குச் சேர வேண்டிய தொகையினால் வரையறுக்கப்பட்டதாகவே அமையும்.

2. 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஒப்பந்த அரசு ஒன்றில் தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனமொன்றினூடாக அம் மற்றைய ஒப்பந்த அரசில் அதன் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற சந்தர்ப்பத்தில் அந்நிரந்தர தாபனம் எவ்வகையான தொழில் முயற்சியாக இருப்பினும் அத்தொழில் முயற்சியுடன் அந்நிலைமை அல்லது அதற்குச் சமமான நிலைகளின்

கீழ் அச்செயற்பாடுகளுக்கு அல்லது அதற்குச் சமமான செயற்பாடுகளில் பூரணமாக, சுதந்திரமாக ஈடுபடுகின்ற வேறுபட்ட அல்லது தனியான தொழில் முயற்சியொன்று காணப்படுமாயின் அதற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியுமான இலாபங்கள் அந்நிரந்தர தாபனங்களுக்கு கிடைத்ததாக ஒவ்வொரு ஒப்பந்த அரசிலும் கருதப்படுதல் வேண்டும்.

3. நிரந்தரத் தாபமொன்றின் இலாபத்தை தீர்மானிக்கும் போது நிறைவேற்று மற்றும் பொது நிருவாக செலவுகள் உள்ளிட்ட அந்நிரந்தரத் தாபனத்தின் வியாபார செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை அவை அந்நிரந்தர தாபனம் அமைந்துள்ள அரசில் அல்லது பிறிதொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்டதாக இருப்பினும் அவற்றை கழிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், (உண்மையாக மேற்கொள்ளப்பட்ட செலவு மீளளிப்புக்களைத் தவிர) காப்புரிமை அல்லது வேறு உரிமைகள் என்பவற்றினைப் பயன்படுத்தவதற்காக செலுத்தும் வேத்துரிமைகள், கட்டணங்கள் அல்லது அவற்றிற்கு சமமான மற்றும் கொடுப்பனவுகள் அல்லது விசேட வடிவங்களிலான சேவைகளினை மேற்கொள்ளுதல் அல்லது முகாமைக்கான தரகுப் பணமாக அல்லது வங்கித் தொழில் முயற்சியொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில் தவிர, நிரந்தர தாபனம் ஒன்றிற்கு கடனாக வழங்கப்பட்ட பணத்தொகையின் மீதான வட்டியாக அல்லது நிரந்தர தாபனமொன்றின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு அலுவலகம் ஒன்றுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகைகள் இருப்பின் அவை தொடர்பில், எந்தவொரு கழிப்பனவினையும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. மேலும், (உண்மையாக மேற்கொள்ளப்பட்ட செலவு மீளளிப்புக்களைத் தவிர) காப்புரிமை அல்லது வேறு உரிமைகளைப் பயன்படுத்துவதற்காகச் செலுத்தும் கட்டணங்கள் அல்லது அவற்றிற்குச் சமமான வேறு கொடுப்பனவுகள் அல்லது விசேட வடிவிலான சேவைகளினை மேற்கொள்ளுதல் அல்லது முகாமைக்கான தரகுப் பணமாக அல்லது வங்கித் தொழில் முயற்சியொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தினைத் தவிர, தொழில் முயற்சியின் பிரதான அலுவலகத்திற்கு அல்லது அதன் வேறு ஏதேனும் அலுவலகமொன்றிற்கு கடனாகச் செலுத்திய பணத் தொகை மீதான வட்டியாக அல்லது நிரந்தர தாபனம் ஒன்றினால் தொழில் முயற்சியின் பிரதான அலுவலகத்திடமிருந்து அல்லது வேறு அலுவலகமொன்றிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தொகைகளை, நிரந்தர தாபனத்தின் இலாபங்களினைத் தீர்மானிக்கின்றபோது கணக்கில் எடுத்தல் கூடாது.

4. வியாபாரத்தின் மொத்த இலாபம், அதன் பல்வேறு தரப்புக்கள் மத்தியில் பகிரப்படுகின்ற முறையை அடிப்படையாகக் கொண்டு நிரந்தர தாபனத்திற்குச் சேர வேண்டிய இலாபத்தினைத் தீர்மானிப்பது, ஒப்பந்த அரசு ஒன்றில் வழக்காறாக இருக்கும் வரையில் இவ் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் உள்ள எந்தவொன்றும் வழக்காற்றின்படி மேற்கொள்ள முடியுமாயின் பகிர்ந்தளிப்பினூடாக வரி அறவிடக் கூடிய இலாப தீர்மானத்தினைத் தடுக்கக் கூடாது. எனினும், பின்பற்றப்படும் பகிர்வு முறை இவ் உறுப்புரையில் உள்ளடங்கியுள்ள அடிப்படைகளுக்கு இணங்கியதான பெறுபேறுகளைத் தரக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

5. ஏதேனும் ஒரு நிரந்தர தாபனம் தொழில்முயற்சிக்காக வெறுமனே பொருட்களை அல்லது வணிகப் பொருட்களை கொள்வனவு செய்வதன் காரணமாக ஏதேனும் ஒரு இலாபத்தினை அந்நிரந்தர தாபனத்திற்கு சேர வேண்டியதாகக் கருதக் கூடாது.

6. அவ்வாறு செய்யாதிருப்பதற்குப் பொருத்தமான, போதியவு காரணிகள் இருப்பின் மாத்திரமே மேற்குறிப்பிட்ட பந்திகளின் நோக்கங்களுக்காக ஒவ்வொரு வருடமும் ஒரே முறையினூடாக நிரந்தர தாபனமொன்றிற்குச் சேர வேண்டிய இலாபம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

7. இவ் ஒப்பந்தத்தின் ஏனைய உறுப்புரைகளில் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டுள்ள வருமான வகைகள், இலாபங்களில் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவ் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் மீது இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் தாக்கம் செலுத்தக் கூடாது.

## உறுப்புரை 8

### கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து

1. சர்வதேசப் போக்குவரத்தில் விமானங்களை இயக்குவதிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீது அவ்விமானப் போக்குவரத்தினை நடாத்துகின்ற தொழில்முயற்சி வதியும் ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது ஒப்பந்த அரசு ஒன்றில் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள தொழில்முயற்சியொன்று சர்வதேசப் போக்குவரத்தில் கப்பல் தொழிற்பாட்டின் மூலம் இலாபமீட்டுமாயின் முதலில் குறிப்பிடப்பட்ட அரசில் வரி அறவிட முடியுமாயினும், அவ்வாறு அறவிடப்படும் வரியை 50 வீதத்திற்குச் சமமான அளவினால் குறைத்தல் வேண்டும்.

3. ஏதேனும் குழாத்தில் ஒரு கூட்டு வியாபாரத்தில் அல்லது ஒரு சர்வதேச தொழிற்பாட்டு முகவர் நிறுவனத்தில் பங்கேற்பதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் தொடர்பிலும் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும். ஆனால், கூட்டு வியாபாரத்தில் அதன் பங்களிப்பு விகிதாசாரத்திற்கேற்ப மாத்திரமே இலாபம் பெறப்பட முடியும்.

## உறுப்புரை 9

கூட்டுத் தொழில் முயற்சிகள்

*1.*

(அ) ஒப்பந்த அரசொன்றிலுள்ள தொழில் முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசிலுள்ள தொழில் முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்கேற்கும் அல்லது

(ஆ) ஒரே நபர்கள் ஒப்பந்த அரசு ஒன்றின் தொழில் முயற்சி ஒன்றிலும் மற்றைய ஒப்பந்த அரசின் தொழில்முயற்சியொன்றின் முகாமை, கட்டுப்பாடு அல்லது மூலதனம் என்பவற்றிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக பங்கேற்கும் சந்தர்ப்பத்தில்.

மற்றும் அச்சந்தர்ப்பத்தில் இரண்டிலும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சுதந்திர தொழில் முயற்சிகளுக்கிடையில் நடைபெறும் வணிக மற்றும் நிதித் தொடர்புகள் பற்றிய நிபந்தனைகளுக்கு மாற்றமான நிபந்தனைகள் அத்தொழில் முயற்சிகள் இரண்டுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது விதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அந்நிபந்தனைகள் காணப்படாவிட்டால் அத்தொழில் முயற்சிகளில் ஒன்றுக்குச் சேரக்கூடிய எனினும், அந்நிபந்தனையின் காரணமாக அவ்வாறு சேராத ஏதேனும் இலாபங்கள் இருப்பின் அவற்றை தொழில்முயற்சியின் இலாபங்களில் உள்ளடக்கி அதற்கிணங்க இலாபங்கள் மீது வரி அறவிடப்பட முடியும்.

*2.* ஒப்பந்த அரசொன்று தனது தொழில் முயற்சியொன்றின் இலாபத்தில் உள்ளடக்கப்படுவதும் அதற்கிணங்க வரி விதிக்கப்படுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட்டதுமான இலாபத்தை இரண்டு தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ளும் நிபந்தனைகள் சுதந்திரமான தொழில் முயற்சிகள் மத்தியில் ஏற்படுத்திக் கொள்ள முடியுமான நிபந்தனைகளாகவே காணப்படுமிடத்து, முதலில் குறிப்பிட்ட ஒப்பந்த அரசின் தொழில்முயற்சியொன்றுக்கு கிடைக்க வேண்டியிருப்பின் அதற்கிணங்க மற்றைய ஒப்பந்த அரசில் விதிக்கப்பட்ட வரியின் அளவுக்குப் பொருத்தமான செம்மையாக்கல்களை மற்றைய அரசு மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய செம்மையாக்கல்களை நிர்ணயிக்கின்ற போது இவ் ஒப்பந்தத்தின் மற்றைய எற்பாடுகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகைய செம்மையாக்கல்களை நிர்ணயிக்கின்ற போது இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பிலும் உரிய கவனத்தை செலுத்துதல் வேண்டும். அத்துடன் அவசியமாயின் ஒப்பந்த அரசுகளின் தகவுடைய அதிகாரிகள் தமக்குள் கலந்தாலோசித்தலும் வேண்டும்.

## உறுப்புரை 10

பங்கிலாபங்கள்

*1.* ஒப்பந்த அரசொன்றில் வதியும் கம்பனியொனால் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் மீது அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

*2.* எவ்வாறாயினும், பங்கிலாபங்களைச் செலுத்துகின்ற கம்பனி வதியும், ஒப்பந்த அரசிலும் அவ் அரசின் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் அத்தகைய இலாபங்களிலிருந்து வரி அறவிட முடியுமாயினும், அப் பங்கிலாபத்தைப் பெறுபவர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின் அறவிடும் வரியானது:

(அ) பயனுரிமையாளர், பங்கிலாபம் செலுத்தும் கம்பனியின் மூலதனத்தில் ஆகக் குறைந்தது 25 சத வீதத்தினை நேரடியாகக் கொண்டுள்ள (பங்குடமையல்லாத) கம்பனியொன்றாக இருப்பின், மொத்த பங்கிலாபத்தில் 7.5 சதவீதத்தினை விடவும்;

(ஆ) ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மொத்த பங்கிலாபத்தில் 10 சதவீதத்தினையும் விஞ்சக்கூடாது.

பங்கிலாபங்கள் செலுத்தப்படுகின்ற இலாபங்கள் விடயத்தில் கம்பனியிடமிருந்து வரி அறவிடுவது தொடர்பில் இப்பந்தியின் ஏற்பாடுகள் தாக்கம் செலுத்தக் கூடாது.

*3.* இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டுள்ள "பங்கிலாபங்கள்" என்ற சொல், பங்குகள் மூலம் கிடைக்கும் வருமானங்களையும், கடன் உரிமைக் கோரிக்கைகள் அல்லாத வேறு உரிமைகளிலிருந்து அல்லது இலாபத்தில் பங்கேற்றல் மூலம் கிடைக்கும் வருமானங்களையும் இலாபங்களைப் பகிர்ந்தளிக்கின்ற கம்பனியொன்று வதியும் ஒப்பந்த அரசின் சட்டங்கள் மூலம் பங்குகளிலிருந்து கிடைக்கும் வருமானம் வரி விதிப்புக்குள்ளாக்கப்படும் முறையில் வரி விதிப்புக்குள்ளாகும் போது நியதிச்சட்ட உரிமைகள் ஊடாக கிடைக்கும் வருமானத்தினையும் குறிக்கும்.

*4. பங்கிலாபங்களின் பயனுரிமையாளர் ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருந்து மற்றைய ஒப்பந்த அரசில் பங்கிலாபங்களைச் செலுத்தி வியாபாரச் செயற்பாடுகளை மேற்கோள்வதற்காக வசிப்பிட அடிப்படையில் அங்கு அமைந்துள்ள நிரந்தர அடிப்படையொன்றினூ டாக சுதந்திரமான தனிப்பட்ட சேவை ஒன்றினை அம்மற்றைய ஒப்பந்த அரசினுள் மேற்கொண்டு பங்கிலாபங்களைச் செலுத்துகின்ற நிலையான அடிப்படை அந்நிரந்தரத் தாபனத்துடன் பயனுறுதிமிக்க முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி நிறுவப்பட்ட ஒரு கம்பனியாயின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா. அத்தகைய சந்தர்பங்களுக்கு ஏற்ற வகையில் இவ் ஒப்பந்தத்தின் 7 ஆம் உறுப்புரை அல்லது 14 ஆம் உறுப்புரை ஏற்புடையதாகும்.*

*5. ஒப்பந்த அரசில் வதியும் கம்பனியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் இலாபம் அல்லது வருமானம் உழைக்கும் சந்தர்ப்பத்தில் அக்கம்பனி செலுத்தும் பங்கிலாபங்கள் மற்றைய அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படும் போது அல்லது அம்மற்றைய அரசில் அமைந்துள்ள பயனுறுதிமிக்க முறையில் தொடர்புபட்டுள்ள நிரந்தர தாபனம் ஒன்றுடன் அல்லது நிரந்தர அடிப்படை ஒன்றுடன் தொடர்பானதாக உள்ளவிடத்து தவிர, கம்பனியால் செலுத்தப்படுகின்ற பங்கிலாபங்கள் தொடர்பில் எந்தவொரு வரியும் அம்மற்றைய ஒப்பந்த அரசினால் விதிக்கப்படாது இருக்கும் வரை கம்பனியினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள் அல்லது பகிரப்படாத இலாபங்கள் அம்மற்றைய அரசில் எழும் இலாபங்களில் அல்லது வருமானங்களில் மொத்தமாக அல்லது பகுதியாக உள்ளடங்கியிருப்பினும் கம்பனியின் பகிரப்படாத இலாபங்கள் மீதான வரியில் உட்படாதிருக்கவும் முடியும்.*

## *உறுப்புரை 11*

### வட்டி வருமானங்கள்

*1. ஒப்பந்த அரசொன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான வட்டியின் மீது அம் மற்றைய அரசில் வரி விதிக்கப்பட முடியும்.*

*2. எவ்வாறாயினும், அத்தகைய வட்டியின் மீது அது எழும் ஒப்பந்த நாட்டிலும் அந்நாட்டின் சட்டங்களுக்கு இணங்க வரி விதிக்கப்பட முடியுமாயினும், வட்டியின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசியல் வதிபவராக இருப்பின் அவ்வாறு அறவிடப்படும் வரியின் அளவு மொத்த வட்டித் தொகையின் 10 சதவீதத்தினை விட விஞ்சுதல் கூடாது.*

*3. இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது, ஒப்பந்த அரசொன்றில் எழுவதும் அதன் பயனுரிமையாளர் என்ற வகையில் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுனரொருவருக்கு செலுத்தப்படுவதுமான வட்டியின் மீது, அவ்வட்டி*

*(அ) மற்றைய ஒப்பந்த அரசின் அரசாங்கத்திற்கு, அவ் அரசாங்கத்திற்கு முழுமையாக அல்லது பிரதானமாகச் சொந்தமாகவுள்ள அதன் உள்ளூராட்சி நிறுவனமொன்றுக்கு, மத்திய வங்கிக்கு அல்லது ஏதேனும் ஒரு முகவருக்கு அல்லது சட்டரீதியான நிறுவனமொன்றுக்கு (நிதி நிறுவனங்கள் அடங்கலாக),*

*(ஆ) மற்றைய ஒப்பந்த அரசின் வதியுனரொருவருக்கு அவ் அரசுக்குச் சொந்தமான அல்லது அதனால் நிர்வகிக்கப்படும் அதன் உள்ளூராட்சி நிறுவனமொன்று, மத்திய வங்கி அல்லது ஏதேனும் முகவர் நிறுவனமொன்று அல்லது சட்டரீதியான நிறுவனமொன்று (நிதி நிறுவனங்கள் அடங்கலாக) மற்றைய அரசின் அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்படும் ஏதேனும் கடன் அல்லது வரவுகள் தொடர்பில்,*

*செலுத்தப்படுவதாயின் மற்றைய அரசில் மாத்திரமே வரிவிதிப்புக்குள்ளாக்க வேண்டும்.*

*4. இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்படுள்ளது போன்று 'வட்டி' என்ற வாசகம், ஈட்டுப் பொருள் ஒன்றை அடகாக வைத்துப் பெறப்பட்ட அல்லது அவ்வாறு அடகு வைக்காது பெறப்பட்ட கடன்காரரின் இலாபத்தில் பங்கு கொள்ளும் உரிமையைக் கொண்ட அல்லது அவ் உரிமையினைக் கொண்டிராத அனைத்து வகையான கடன் உரிமைகள் மூலமும் கிடைக்கின்ற வருமானங்களையும் குறிப்பாக அரசாங்க பிணையங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் முறிகள் மற்றும் தொகுதிக் கடன்களுடன் இணைந்துள்ள வெகுமதிகள் மற்றும் பிரிவுகள் அடங்கலாக முறிகள் அல்லது தொகுதிக் கடன்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களையும் குறிக்கும். இவ் உறுப்புரையின் நோக்கங்களுக்காக தாமதித்துச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கான தண்டப் பணம் வட்டியாகக் கருதப்படக் கூடாது.*

*5. ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவரான வட்டியின் பயனுரிமையாளர் வட்டி எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனம் ஒன்றினூடாக வியாபாரச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துபவராயின், அல்லது அங்கு அமைந்துள்ள நிலையான அடிப்படை ஒன்றின் மூலம் மற்றைய ஒப்பந்த அரசின் உள்ளே சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வாராயின், மற்றும் வருமானம் செலுத்தப்படும் கடனுரிமை அந்நிரந்தர தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் வினைத்திறன் வாய்ந்த தொடர்பினைக் கொண்டிருப்பின் 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகமாட்டா. அத்தகைய சந்தர்ப்பங்களில் இவ் ஒப்பந்தத்தின் 7 ஆம் அல்லது 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.*

*6.* வருமானம் செலுத்துபவர் ஒப்பந்த அரசாக அல்லது அதன் அரசியல் உப பிரிவு ஒன்றாக அல்லது உள்ளூர் அதிகாரசபை ஒன்றாக அல்லது அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து வருமானம் அவ் ஒப்பந்த அரசில் எழுவதாக கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வருமானம் செலுத்துபவர் ஒப்பந்த அரசு ஒன்றில் வதிபவராக இருப்பினும் இல்லாவிடினும் அவருக்கு வருமானத்தை செலுத்துவதற்கு அல்லது சேர்வதற்குரிய கடன் பெறுதன்மை மற்றும் தொடர்புடைய நிரந்தர தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள அரசில் அவ்வருமானம் எழுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*7.* செலுத்துநருக்கும் பயனுரிமையாளருக்குமிடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் தனியாளரொருவருக்கும் இடையில் காணப்படும் விசேட தொடர்பு ஒன்றின் காரணமாகச் செலுத்தப்படும் வருமானத்தின் அளவு, அது செலுத்துப்படும் கடனுரிமையைக் கவனத்திற் கொண்டு அத்தகைய தொடர்பு காணப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்துபவர் பயனுரிமையைக் கொண்டுள்ள ஆள் ஆகிய இருவரும் உடன்பட்டிருக்க முடியுமான அளவைவிட விஞ்சுமாயின், இறுதியாகக் குறிப்பிட்ட அளவின் மீது மாத்திரமே இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளின் மேலதிகப் பகுதி மீது இவ் ஒப்பந்தத்தின் மற்றைய ஏற்பாடுகளைப் பொருத்தமான முறையில் கவனத்தில் எடுத்து ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கிணங்க மேலும் வரிகள் விதிக்கப்பட முடியும்.

***உறுப்புரை 12***

வேத்துரிமைகள்

*1.* ஒப்பந்த அரசு ஒன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசில் வதியும் ஒருவருக்கு செலுத்தப்படுவதுமான வேத்துரிமைகள் மீது அம் மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

*2.* எவ்வாறாயினும், அவ்வேத்துரிமைகள் அவை எழும் ஒப்பந்த அரசிலும் அவ் ஒப்பந்த அரசின் சட்டத்திற்கும் இணங்க வரி விதிக்கப்பட முடியும், எனினும், வேத்துரிமைகளின் பயனுரிமையாளர் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராக இருப்பின் அவ்வாறு அறவிடப்படும் வரி அவ்வேத்துரிமைகளின் மொத்தப் பெறுமானத்தின் 10 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

*3.* இவ் உறுப்புரையில் பயன்படுத்தப்பட்டவாறு "வேத்துரிமைகள்" என்ற சொல் சினிமாச் சுருள் திரைப்படங்கள் அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சி ஒளிபரப்புக்குப் பயன்படுத்தப்படும் நாடாக்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் உள்ளிட்ட ஏதேனும் இலக்கிய, கலை அல்லது விஞ்ஞானப் படைப்புக்களின் வெளியீட்டு உரிமைகள், காப்புரிமைப் பத்திரங்கள், வர்த்தகச் சின்னங்கள், வடிவங்கள் அல்லது மாதிரிகள், கணினி மென்பொருள் நிகழ்ச்சிகள், சுவட்டு வரைபடங்கள், இரகசியப் பொருட் பட்டியலொன்றினை அல்லது செயன்முறை ஒன்றைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான அல்லது தொழில்நுட்ப, வர்த்தக அல்லது விஞ்ஞான உபகரணங்களை அல்லது விஞ்ஞான, வர்த்தக அல்லது தொழில்நுட்ப அனுபவம் ஒன்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பயன்படுத்துவதற்கான அல்லது பயன்படுத்தும் உரிமைக்கான ஒரு அடிப்படையாகக் கிடைத்த எவ்வகையான கொடுப்பனவினையும் குறிக்கும்.

*4.* வேத்துரிமைப் பயனுரிமையாளர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராகவும் வேத்துரிமை எழும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனம் ஒன்றினூடாக வியாபாரமொன்றினைக் கொண்டு நடாத்துவதாயின் அல்லது மற்றைய ஒப்பந்த அரசில் அமைத்துள்ள நிலையான அடிப்படையொன்றினூடாக சுதந்திரமான தனிப்பட்ட சேவைகளை மேற்கொள்வதாயின், வேத்துரிமைகள் செலுத்தப்படுவது எவ்வகையான உரிமை அல்லது ஆதனம் தொடர்பிலாயினும் அவ் உரிமை அல்லது அவ் ஆதனம் அந்நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிலையான அடிப்படையுடன் உயிர்ப்பான தொடர்பினைக் கொண்டிருப்பின், இவ் உறுப்புரையின் 1 ஆம் 1 ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகக் கூடாது. அத்தகைய சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உறுப்புரை 7 அல்லது உறுப்புரை 14 இன் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

5. வேத்துரிமைகள் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் கட்டணத்தினைச் செலுத்துபவர் அவ் அரசில் வதியும் ஒருவராக இருக்குமிடத்து வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் அவ் ஒப்பந்த அரசில் எழுபவையாக கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், வேத்துரிமைகளைச் செலுத்தும் நபர் ஒப்பந்த அரசொன்றில் வதிபவராக இருப்பினும் இல்லாவிடினும் வேத்துரிமைகளை அல்லது தொழில்நுட்ப வேவைக் கட்டணங்களை செலுத்தும் பொறுப்புடன் தொடர்புடைய நிரந்தர தாபனம் ஒன்று அல்லது நிலையான அடிப்படையொன்று ஒப்பந்த அரசில் அவருக்குச் சொந்தமாக இருந்து அவ்வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைகள் கட்டணங்கள் அந்நிரந்தர தாபனம் அல்லது நிலையான அடிப்படையினால் செலுத்தப்படுமாயின், அச்சந்தர்ப்பத்தில் நிரந்தர தாபனம் அல்லது நிலையான அடிப்படை அமைந்துள்ள ஒப்பந்த அரசில் வேத்துரிமைகள் அல்லது தொழில்நுட்ப சேவைக் கட்டணங்கள் எழுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*6.* செலுத்துபவருக்கும் பயனுரிமையாளருக்கும் இடையில் அல்லது அவர்கள் இருவருக்கும் வேறு எவரேனும் ஆளொருவருக்குமிடையில் காணப்படும் விசேடமான தொடர்பில் காரணமாக பயன்பாட்டு உரிமை அல்லது தகவல்களைக் கவனத்திற் கொண்டு செலுத்தப்படும் வேத்துரிமைகளின் தொகை, அத்தகைய தொடர்பு ஏதும் இல்லாதுவிடத்து செலுத்துபவரும் பெறுபவரும்

உடன்பாடு சாத்தியம் கொண்ட தொகையினைவிட விஞ்சுமாயின், இறுதியாகக் குறிப்பிட்ட தொகைக்கு மாத்திரமே இவ் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும், அச்சந்தர்ப்பத்தில் இவ் உறுப்புரையின் மற்றைய ஏற்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி, கொடுப்பனவுகளில் காணப்படும் மேலதிக தொகை மீது ஒவ்வொரு ஒப்பந்த அரசினதும் சட்டத்திற்கு இணங்க வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

## உறுப்புரை 13

### மூலதன இலாபங்கள்

1. ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர், உறுப்புரை 6 இன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதும் மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ளதுமான அசையா ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதனூடாகப் பெற்ற இலாபங்கள் மீது அம் மற்றைய அரசியல் வரி விதிக்கப்படலாம்.

2. பெறுமதியில் 50 சதவீதத்தினை விஞ்சிய தொகையொன்று மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்திருக்கும் அசையா ஆதனங்களிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாக கிடைக்கும் பங்குகளைப் பராதீனப்படுத்துவதன் மூலம் ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவர் பெற்றுக் கொள்ளும் இலாபங்கள் மீது மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்பட முடியும்.

3. ஒப்பந்த அரச ஒன்றின் தொழில்முயற்சி ஒன்றுக்குச் சொந்தமான மற்றைய ஒப்பந்த அரசில் உள்ளநிரந்தர தாபனம் ஒன்றின் வியாபார ஆதனங்களில் ஒரு பகுதியாகவுள்ள அசையும் ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் அல்லது ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவருக்கு மற்றைய ஒப்பந்த அரசில் உள்ள நிலையான அடிப்படையுடன் தொடர்புடைய வகையில் சுதந்திரமான தனிப்பட்ட சேவை வழங்கலுக்காகவுள்ள அசையும் ஆதனங்களை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது (அது மாத்திரம் அல்லது முழு தொழில் முயற்சியுடன்) அல்லது அந்நிலையான அடிப்படை உரிமை மாற்றம் செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் அடங்கலாக அம்மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.

4. அனைத்துலகப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல்கள் அல்லது வானூர்தியுடன் தொடர்புடைய அசைவுறு ஆதனத்தின் பராதீனத்தால் பெறப்படும் ஆதாயங்கள் அத்தொழில் முயற்சியின் பயன்மிக்க முகாமை அமைந்துள்ள ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.

5. இவ் உறுப்புரையின் முந்திய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் தவிர எந்தவொரு ஆதனத்தையும் பராதீனப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மீது அவ் ஆதனங்களைப் பராதீனப்படுத்துபவர் வதிபவராகவுள்ள ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட வேண்டும்.

## உறுப்புரை 14

### சுயாதீன தனிப்பட்ட சேவைகள்

1. ஒப்பந்த அரசொன்றில் வதிவுள்ளவரான ஆளொருவரினால் தொழில் சேவைகள் அல்லது சுயாதீன முறையிலான வேறு செயற்பாடுகள் சார்பில் பெறப்படும் வருமானம் பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர அதே அரசில் மட்டும் வரிக்குட்படுத்தப்படலாம் :-

(அ) அவரின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மற்றைய ஒப்பந்த அரசில் நிரந்தரமான ஓர் அடிப்படையானது தொடர்ந்தும் அவருக்கு இருப்பின் அத்தகையதொரு வருமானத்தினை மற்றைய ஒப்பந்த அரசியல் வரி விதிப்புக்குட்படுத்த முடியுமானவிடத்து. குறித்த மற்றைய அரசில் அறவிடக் கூடிய அந்நிரந்தர அடிப்படைக்கு சமமாகக் கூடிய வருமான அளவுக்கு மட்டுமேயாகும் ; அல்லது

(ஆ) அவர் மற்றைய அரசில் தங்கியிருக்கும் காலப்பகுதி அல்லது காலப்பகுதிகள் தொடர்புடைய அரசிறை வருடத்தில் ஆரம்பமாகும் அல்லது முடிவடையும் ஏதேனும் பன்னிரண்டு மாத காலப்பகுதியில் மொத்தமாக 183 நாட்களை விஞ்சியிருக்குமாயின், அவ்விடயத்தில் மற்றைய அரசில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகையிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் மாத்திரம் அரசில் வரி விதிப்பனவு செய்யப்படலாம்.

2. ‘உயர் தொழில் சேவைகள்’ என்ற சொல்லில் விசேடமாக சுயாதீன விஞ்ஞான, இலக்கிய, கலை சார்ந்த கல்விசார் அல்லது கற்பித்தல் நடவடிக்கைகள் போன்றவையும் அவ்வாறே மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் கணக்காளர்களின் சுயாதீன நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

### உறுப்புரை 15

*சார்ந்துள்ள தனிப்பட்ட சேவைகள்*

*1. இந்த ஒப்பந்தத்தின் 16, 18 மற்றும் 19 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்த அரசொன்றின் வதியுனர் ஒருவர் தனது தொழில் மூலம் பெறும் சம்பளங்கள் வேதனங்கள் போன்ற பெறுவனவுகளை மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியுனர் தொழில் புரியும் பட்சத்தில் அன்றி மேற்குறித்த அரசில் மாத்திரம் வரி விதிப்புக்குள்ளாக்கல் வேண்டும். அவ்வாறு தொழில் புரியும் பட்சத்தில் அந்தத் தொழில் மூலம் உழைக்கும் ஊதியத்தை மேற்கூறிய மற்றைய ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குள்ளாக்க முடியும்.*

*2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் மற்றைய ஒப்பந்த அரசில் ஆற்றப்படும் ஊதியம் தொடர்பில் ஒப்பந்த அரசில் வதியுமொருவராற் பெறப்படும் வேதனம், அந்த முதற் குறிப்பிட்ட ஒப்பந்த அரசில் மட்டுமே பின்வரும் காரணங்களுக்காக வரி விதிப்புக்குள்ளாகும் :-*

*(அ) நிதியாண்டு தொடர்பில் அதன் ஆரம்பததில் அல்லது முடிவில் ஏதேனும் பன்னிரண்டு மாதங்களில் மொத்தமாக 183 நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றினை அல்லது காலப்பகுதிகளுக்கான மற்றைய அரசில் தற்போது வேதனத்தினைப் பெறுபவராக இருப்பின், அத்துடன்*

*(ஆ) வேதனங்கள், மற்றைய ஒப்பந்த அரசில் வதியாத தொழில் தருநரொருவாரால் அல்லது அவர் சார்பில் செலுத்தப்பட்டிருப்பின், அத்துடன்*

*(இ) அவ்வேதனம் தொழில் தருநர் மற்றைய ஒப்பந்த அரசில் வைத்திருக்கும் நிரந்தர நிறுவனமொன்றினால் அல்லது நிரந்தர அடிப்படையினால் செலுத்தப்பட்டிருக்காவிடின்,*

*3. இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசொன்றின் தொழில் முயற்சியினால் சர்வதேசப் போக்குவரத்தில் இயக்கப்படும் கப்பல் அல்லது வானூர்தியினால் ஆற்றப்படும் தொழில் தொடர்பில் பெறப்படும் வேதனம் அந்த தொழில் முயற்சியின் பயன்மிகு முகாமைத்துவம் அமைந்துள்ள ஒப்பந்த அரசில் வரி விதிப்புக்குள்ளாக்கப்படலாம்.*

### உறுப்புரை 16

*பணிப்பாளர்கள் கட்டணங்கள்*

*ஒப்பந்த அரசொன்றில் வதியும் ஒருவர், மற்றைய ஒப்பந்த அரசொன்றில் வதிவுள்ள கம்பனியொன்றின் பணிப்பாளர் சபை, முகாமைத்துவ சபை, மேற்பார்வை சபை அல்லது அதனையொத்த வேறு ஏதேனும் சபையொன்றில் உறுப்பினராக பதவியை வகிப்பதன் மூலம் பெறும் பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் அதனையொத்த கொடுப்பனவுகள் மீது அந்த மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.*

### உறுப்புரை 17

*கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும்*

*1. 14 மற்றும் 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஒப்பந்த அரசில் வதியுமொருவர் அரங்கம், இயக்கத் திரைப்படம், வானொலி அல்லது தொலைக்காட்சி கலைஞராக அல்லது இசையமைப்பாளராக அல்லது விளையாட்டு வீரராக அல்லது தனிப்பட்ட தொழிற்பாடுகள் மூலம் மற்றைய ஒப்பந்த அரசில் பெறுகின்ற வருமானத்தின் மீது அத்தொழிற்பாடுகள் இடம் பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.*

*2. கலைஞர் ஒருவர் அல்லது விளையாட்டு வீரர் ஒருவருக்கு அவரின் தனிப்பட்ட முயற்சிகளிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அக்கலைஞருக்கு அல்லது விளையாட்டு வீரருக்கு சேராமல் வேறொருவருக்கு சேருமிடத்து 7, 14 மற்றும் 15 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அவ்வருமானங்களின் மீது அக்கலைஞர் அல்லது விளையாட்டு வீரரின் முயற்சிகள் இடம் பெறும் ஒப்பந்த அரசில் வரி விதிக்கப்படலாம்.*

*3. 1 ஆம் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒப்பந்த அரசுகளுக்கிடையிலான கலாச்சார உடன்படிக்கை அல்லது ஏற்பாட்டின் கீழ் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானம் அப்பயணத்திற்கு ஒப்பந்த அரசுகளில் ஒன்றின் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்று அல்லது அரசாங்க நிறுவனமொன்றின் நிதிகளின் கணிசமான அளவு அல்லது முழுமையாக*

*ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருந்தால் மாத்திரமே அச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட அரசில் அவ் வருமானங்களுக்கு விலக்களிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் அத்தகைய செயற்பாட்டிலிருந்து பெறப்படும் வருமானம் உறுப்புரை 7 அல்லது அறுப்புரை 14 அல்லது உறுப்புரை 15 இன் ஏற்பாடுகளுக்கமைவாக வரி விதிக்கப்படலாம்.*

**உறுப்புரை 18**

*ஓய்வூதியங்கள், ஆண்டுத் தொகைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு தொகைகள்*

*1. 19 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் எற்பாடுகளுக்கிணங்க, ஒப்பந்த அரசு ஒன்றில் வதியும் ஒருவருக்கு மற்றைய கடந்த காலத்தில் ஒப்பந்த அரசில் செய்த தொழிலை அல்லது சேவையைக் கருத்தில் கொண்டு அம் மற்றைய ஒப்பந்த அரசின் மூலங்களிலிருந்து செலுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் அதையொத்த ஊதியங்களின் மீது அந்த ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்படலாம்.*

*2. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், உறுப்புரை 19 இன் 2 ஆம் பந்தியின் எற்பாடுகளுக்குட்பட்டு, ஒப்பந்த அரசொன்றில் எழுவதும் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுனர் ஒருவருக்குச் செலுத்தப்படுவதுமான ஓய்வூதியம் அல்லது அதற்குச் சமமான (ஒரே தடவையில் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட) அரசில் மாத்திரமே வரி விதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொடுப்பனவை, ஓய்வூதியத்தை அல்லது வேதனத்தினை பெறுபவரினால் அல்லது அவரின் சார்பில் செலுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையிலிருந்து அல்லது ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அவரின் சார்பில் வழங்கப்பட்ட மானியத்திலிருந்து செலுத்தப்படுமாயின், அப்பங்களிப்புத் தொகை, மானியம் அல்லது ஓய்வூதியம் அல்லது அதற்குச் சமமான வேதனங்கள் மீது முதலில் குறிப்பிட்ட அரசின் வழமையான வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்படலாம்.*

*3. 'ஆண்டுத் தொகை' என்ற சொல்லின் பொருள் பணத்தை அல்லது பணத்தின் பெறுமதியில் மற்றும் போதியளவு விபரத்திரட்டில் கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடொன்றின் கீழ் குறித்த காலப்பகுதியொன்றுக்குள் அல்லது குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின்போது அல்லது வாழ்நாளில் காலத்திற்கு காலம் செலுத்துவதற்கு குறிப்பிடப்பட்டதாகும்.*

**உறுப்புரை 19**

*அரசாங்க சேவை*

*1. (அ) ஒப்பந்த அரசொன்று அல்லது அரசியல் உப பிரிவொன்று உள்ளூர் அதிகார சபையொன்று அவ்வரசுக்கு அல்லது உப பிரிவுக்கு அல்லது அதிகார சபைக்கு ஆற்றப்படும் சேவைகளுக்காக எவரேனும் ஆளுக்கு செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியம் தவிர்ந்த அதனையொத்த வேதனங்களுக்கு அவ்வரசில் மட்டுமே வரி விதிக்கப்பட முடியும்.*

*(ஆ) எவ்வாறாயினும், அத்தகைய சேவைகள் மற்றைய அரசில் ஆற்றப்பட்டிருப்பின் அத்தகைய நபர் ஒப்பந்த அரசில் வதிபவராயின் அத்தகைய அவர்.*

(i) *அவ் ஒப்பந்த அரசின் பிரஜையாக; அல்லது*

(ii) *அத்தைய சேவைகளை ஆற்றும் நோக்கத்திற்காக மட்டும் அவ் அரசில் வதிபவராக மாறியிராதவராகவும் இருப்பின், அத்தகைய சம்பளங்கள், கூலிகள் மற்றும் அதனையொத்த வேதனங்களின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மாத்திரம் வரி விதிக்கப்பட முடியும்.*

*2. (அ) 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது ஒப்பந்த அரசொன்றினால் அல்லது அரசியல் உப பிரிவொன்றினால் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றினால் உருவாக்கப்பட்ட நிதிகளிலிருந்து அவ் ஒப்பந்த அரசுக்கு அல்லது உப பிரிவுக்கு அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றுக்கு எவரேனும் ஆள் ஒருவர் ஆற்றிய சேவைகள் தொடர்பில் அவ் ஆளுக்கு செலுத்தப்படும் ஏதேனும் ஓய்வூதியம் மற்றும் அதனையொத்த வேதனங்கள் மீது அந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்பட முடியும்.*

*(ஆ) எவ்வாறாயினும், குறித்த ஆள் மற்றைய ஒப்பந்த அரசில் வதிபவராகவும் நாட்டினத்தவராகவும் இருப்பாராயின் அத்தகைய ஓய்வூதியம் மற்றும்*

*அதனையொத்த வேதனங்களின் மீது மற்றைய ஒப்பந்த அரசில் மட்டுமே வரி விதிக்கப்பட முடியும்.*

*3. ஒப்பந்த அரசொன்றினால் அல்லது அரசியல் உப பிரிவொன்றினால் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றினால் நடாத்தப்படும் தொழில் முயற்சியொன்று தொடர்பில் ஆற்றப்படும் சேவைகளுக்கான சம்பளங்கள், கூலிகள், ஓய்வூதியங்கள் மற்றும் அதனையொத்த வேறு வேதனங்கள் தொடர்பில் 15, 16, 17 மற்றும் 18 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் எற்புடையதாகுதல் வேண்டும்.*

**உறுப்புரை 20**

*மாணவர்கள் மற்றும் தொழில் பயிலுநர்கள்*

*1. ஒப்பந்த அரசொன்றுக்கு வருவதற்கு உடன் முந்திய காலத்தில் மற்றைய ஒப்பந்த நாட்டில் வதியும் அல்லது வசித்த அத்துடன் தனது கல்வி அல்லது பயிற்சிக்காக மட்டும் முதலில் கூறப்பட்ட ஒப்பந்த அரசில் இருக்கின்ற மாணவரொருவர், பயிலுநர் ஒருவர் அல்லது தொழில் பயிலுநர் ஒருவர் தனது பராமரிப்பு, கல்வி அல்லது பயிற்சி அலுவல்களுக்காக பெறும் கொடுப்பனவுகளை அவ்வரசிற்கு புறம்பான மூலங்களிலிருந்து பெறுவதாயின் அவற்றுக்கு அந்த அரசில் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.*

*2. ஒப்பந்த அரசொன்றிலுள்ள உயர் கல்விக்கான பல்கலைக்கழகமொன்றின் அல்லது வேறு நிறுவனமொன்றின் மாணவரொருவர் மற்றும் வியாபார, தொழில்நுட்ப, விவசாய அல்லது காட்டுத் தொழில் பயிலுநரொருவர், அவ் அரசுக்கு வருவதற்கு உடன் முன்னரான காலத்தில் மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநராகவும், 183 நாட்களுக்கு மேற்படாத தொடர்ச்சியான காலப் பகுதியில் முதலில் குறிப்பிட்ட அரசில் உள்ள போது, அவ் அரசிலும் நிறைவேற்றும் சேவைகளுக்காகப் பெறும் ஊதியத்தை, அவ்வூதியம் அவருடைய கல்வி அல்லது பயிற்சிக்கானதாகவும் பராமரிப்புக்கானதாகவும் உள்ள வரையில், அவ் அரசில் வரிவிதிப்புக்குள்ளாக்கக் கூடாது.*

**உறுப்புரை 21**

*ஏனைய வருமானங்கள்*

*1. இவ் ஒப்பந்தத்தில் முன் குறிப்பிடப்பட்ட உறுப்புரைகளில் குறிப்பிடப்படாத ஒப்பந்த அரசொன்றில் வதிபவர் ஒருவரின் வருமான விடயம் எந்தவொரு அரசில் எழுந்தாலும் அதே அரசில் மட்டும் வரி விதிப்புக்குட்படுத்தப்படல் வேண்டும்.*

*2. ஒப்பந்த அரசொன்றின் வதியும் ஆளொருவர், மற்றைய ஒப்பந்த அரசில் அமைந்துள்ள நிரந்தர தாபனமொன்றினூடாக வியாபாரமொன்றினைக் கொண்டு நடாத்துவாராயின் அல்லது அம்மற்றைய அரசில் சுயாதீனமாக தனிப்பட்ட கோவைகளை மேற்கொள்வாராயின் அத்துடன் வருமானம் செலுத்தப்படும் உரிமை அல்லது ஆதனம் மேலே குறிப்பிடப்பட்ட நிரந்தரத் தாபனத்துடன் அல்லது நிரந்தர அடிப்படையுடன் தொடர்புடையதாகவும் இருப்பின், இவ்வொப்பந்தத்தின் உறுப்புரை 6 இன் 2 ஆம் பந்தியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளவாறு அசையா ஆதனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அல்லது வருமானங்கள் மீது இவ் உறுப்புரையின் 1 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகள் பொருந்தமாட்டா, அவ்வாறான சந்தர்ப்பங்களில் உறுப்புரை 7 இன் ஏற்பாடுகள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு எற்புடையதாகுதல் வேண்டும்.*

*3. 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது இந்த நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் மற்றைய ஒப்பந்த அரசில் எழுகின்ற விடயங்களுடன் சம்பந்தப்படாமல் ஒப்பந்த அரசொன்றில் வதிபவரின் வருமான விடயங்களில் மற்றைய அரசில் வரி விதிக்கப்படலாம்.*

**உறுப்புரை 22**

*பயன்களை மட்டுப்படுத்துதல்*

*1. ஒப்பந்த அரசொன்றில் வதியுனராகவும் மற்றைய ஒப்பந்த அரசில் வருமானம் உழைப்பவருமான ஆளொருவர் இவ்வொப்பந்தத்தின் ஏற்பாடுகளின் மூலம் அநுகூலங்களினைப் பொறும் நோக்கில் அவ்வருமான விடயங்களினை உருவாக்குதல் அல்லது ஏற்பாடு செய்தல் எவரேனும் ஆளொருவரின் பிரதான நோக்கமாக அல்லது பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருப்பின், வேறு ஏதேனும் விதத்தில் இவ்வொப்பந்தத்தில் எற்பாடுகள் செய்யப்பட்டிருக்காதவிடத்து வரி அறவீட்டிலிருந்து விலக்களிப்புப் பெறுவதற்கு உரித்தளிக்கப்படுதலாகாது.*

*2. முதலாம் பந்தியின் கீழ் தீர்மானிக்கப்படுகின்ற போது உரிய தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது அதிகாரிகள் கவனத்தில் கொள்ளப்படுகின்ற ஏனைய விடயங்கள், வருமானத்தின் பெறுமதி, தன்மை, வருமானம் உழைத்த காரணங்கள், கொடுக்கல் வாங்கல்களில் பங்கேற்ற தரப்புக்களின் நோக்கம் சட்டரீதியானதாக அல்லது உண்மையானவையாக, நேரடியாக அல்லது மறைமுகமாக நிருவகிக்கப்படும் அல்லது பயன் பெறும் ஆளின் 1 ஆம் வருமானம் அல்லது 2 ஆம் வருமானம் என்பவற்றினைச் செலுத்துதல் அல்லது கிடைத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய ஒப்பந்த அரசில்/அரசுகளில் வதியுனரான ஆளின் /ஆட்களின் ஆளடையாளம், வதிவு என்பவற்றினையும் கவனத்தில் கொள்வதற்கு உரித்தளிக்கப்படுதல் வேண்டும்.*

**உறுப்புரை 23**

இரட்டைவரி விதிப்பினை நீக்குதல்

*1. எதேனும் ஒப்பந்த அரசொன்றில் அமுலிலிருக்கும் சட்டங்கள் குறித்த ஒப்பந்த அரசுகளின் வருமான வரி விதிப்பினை தொடர்ந்தும் நிருவகிக்கும். குறித்த வருமானம் ஒப்பந்த அரசுகள் இரண்டிலும் வரி விதிப்புக்குள்ளாகுமிடத்து இவ் உறுப்புரையின் பின்வரும் பந்திகளுக்கிணங்க, இரட்டை வரி விதிப்பிலிருந்து நிவாரணம் வழங்கப்படும்.*

*2. சர்வதேச இரட்டை வரி விதிப்பை நீக்குவது தொடர்பில் (அதன் பொதுவான கோட்பாடுகளுக்கு பாதிப்பில்லாதவாறு) பின்லாந்தின் உரிய சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் பின்வரும் விதத்தில் பின்லாந்தில் இரட்டை வரி விதிப்பு நீக்கப்படும்.*

(அ) *இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பின்லாந்தில் வதியுநரான ஒருவர் வருமானமொன்றை உழைக்கும் போது இலங்கையிலும் வரி அறவிடப்பட முடியும் என்பதுடன், "ஆ" ஆம் உப பந்தியின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில், அவ் ஆளின் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பின்லாந்து வரிகளுடன் தொடர்புடைய வகையில் இலங்கைச் சட்டத்தில் கீழும் இந்த ஒப்பந்தத்துக்கு இணங்க இலங்கையில் செலுத்திய வரிக்குச் சமனான தொகையைக் கழிப்பதற்குப் பின்லாந்தில் அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.*

(ஆ) *இலங்கையின் வதியுநரான கம்பனியொன்று பின்லாந்தின் வதியுநரானதும் பங்கிலாபம் செலுத்துகின்ற கம்பனியின் வாக்குரிமையில் குறைந்தபட்சம் 10 ஐ நேரடியாக நிர்வகிப்பதுமான கம்பனியொன்றுக்குச் செலுத்தப்படும் பங்கிலாபங்களுக்குப் பின்லாந்து வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.*

(இ) *இவ் ஒப்பந்தத்தின் ஏனைய ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது, இலங்கையின் வதியுநராகவும் உறுப்புரை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்லாந்து வரிகளின் விடயத்தில் பின்லாந்தின் வதியுநராகக் கருதப்படுபவருமான ஆளின் மீது பின்லாந்தில் வரி விதிக்கப்பட முடியும். எவ்வாறாயினும் உப பந்தி (அ) விற்கு இணங்க இலங்கையில் வருமானத்திற்காகச் செலுத்திய வரியை பின்லாந்தில் கழிப்பதற்கு பின்லாந்து அனுமதி வழங்கும். இப்பந்தியின் ஏற்பாடுகள் பின்லாந்து தேசத்தவர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும்.*

*3. இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, இலங்கையின் வதியுநரொருவர் பின்லாந்தில் வருமானம் உழைக்கின்ற போது, பின்லாந்தில் வரி அறவிடப்பட முடியும் என்பதுடன் அவ்வருமானத்திற்காகச் செலுத்த வேண்டிய பின்லாந்து வரியின் அளவை, அவ்வதியுநர் அவ்வருமானம் தொடர்பில் வரி வரவாகக் கழிப்பதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். அவ்வரி வரவு அவ்வருமானத்திற்குச் சேர்க்க முடியுமான இலங்கை வரியின் அளவை விஞ்சியதாக அமையக்கூடாது.*

*4. இந்த உறுப்புரையின் நோக்கத்திற்காக வரி எனும் வாசகமானது, வாக்கியத்தின் தேவைக்கேற்றவாறு இலங்கை வரி அல்லது போலந்து வரியினைக் குறிப்பிடுவதுடன், ஆனால் அத்தகைய வரிகள் தொடர்பில் விதிக்கப்படும் தண்டப்பணம் அல்லது அபராதத்தினை பிரயோகிக்கின்ற அல்லது பிரதிபலிக்கின்ற இந்த உடன்படிக்கையிலுள்ள வரிகள் தொடர்பில் ஏதேனும் விதிப்பனவினை செய்யத் தவறுதல் அல்லது விடுபாடு தொடர்பில் செலுத்தத்தக்கதான ஏதேனும் தொகையினை உள்ளடக்குதலாகாது.*

**உறுப்புரை 24**

பாகுபாடு காட்டாமை

*1. ஒரு ஒப்பந்த அரசொன்றின் வதிபவர்கள் மீது, மற்றைய ஒப்பந்த அரசில், நாட்டினத்துரிமை தொடர்பில் விசேடமான சம்மான நிலைமைகளின் கீழ் அம்மற்றைய ஒப்பந்த அரசின் வதிபவர்கள் மீது செல்லுபடியாகும் எதேனும் வரி விதிப்பு அல்லது தேவைப்பாடு விதிக்கப்படக்கூடாது. 1 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினைக் கவனத்தில் கொள்ளாது ஒப்பந்த அரசுகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் வதியுனராக இல்லாத ஆட்களுக்கும் இவ் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல் வேண்டும்.*

*2. ஒப்பந்த அரசொன்றில் தொழில்முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசில் வைத்திருக்கும் நிலையான தாபனமொன்றின் மீது அச்செயற்பாடுகளிலேயே ஈடுபடும் மற்றைய அரசின் தொழில் முயற்சிகள் தொடர்பில் அறவிடப்படும் வரிகளை விடவும் குறைந்த நன்மைகளைத் தரக்கூடியவாறு மற்றைய அரசில் வரி அறவிடுதல் கூடாது. ஒப்பந்த நாடொன்றில் தனது சொந்த குடும்ப பொறுப்புக்கள் காரணமாக வரி விதிப்பு நோக்கங்களுக்காக வழங்கும் ஏதேனும் தனிப்பட்ட விசேட தொகைகள், நிவாரணங்கள் அல்லது கழிப்பனவுகளை மற்றைய ஒப்பந்த அரசின் வதிபவர்களுக்கு வழங்குவதற்காக இவ் ஏற்பாட்டின் மூலம் கட்டுப்பட்டுள்ளது என விளங்கிக் கொள்ளுதலாகாது.*

*3. 9 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தி, 11 ஆம் உறுப்புரையின் 7 ஆம் பந்தி, 12 ஆம் உறுப்புரையின் 6 ஆம் பந்தி ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பயன்வலுப் பெறும் சந்தர்ப்பங்களினைத் தவிர, ஒப்பந்த அரசொன்றின்*

தொழில்முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசின் வதியுநர் ஒருவருக்குச் செலுத்துகின்ற வட்டி, வேத்துரிமைகள் மற்றும் ஏனைய செலவுகள் (அத்தொழில் முயற்சியின் வரி அறவிட முடியுமாயின் இலாபத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக) ஏனையவற்றை முதலில் குறிப்பிட்ட அரசின் வதிநனர் ஒருவருக்குச் செலுத்தியதாகக் கருதி அதே நிபந்தனைகளின் கீழ் கழிப்பனவு செய்ய முடியும். அத்துடன் ஒப்பந்த அரசொன்றின் தொழில்முயற்சியொன்று மற்றைய ஒப்பந்த அரசின் வதியுனர் ஒருவருக்கு உள்ள ஏதேனும் கடன் தொகையொன்றை அத்தொழில்முயற்சியின் வரி அறவிட முடியுமான மூலதனத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, முதலில் குறிப்பிட்ட அரசின் வதியுநர் ஒருவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஒன்றாகக் கருதி அதே நிபந்தனைகளின் கீழ் கழிப்பனவு செய்ய முடியும்.

4. மற்றைய ஒப்பந்த அரசின் வதிபவர் ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தன்வசமாக்கிக் கொண்டிருக்குமிடத்து அல்லது நிருவகிக்குமிடத்து முதலாவதாக குறிப்பிடப்பட்ட அரசின் தொழில் முயற்சிகள் விதிக்கப்பட்ட வரிகள் அல்லது விதிவிலக்குகளைப் பார்க்க வித்தியாசமான அல்லது தாங்க முடியாத மிகக் கஷ்டமான எவ்வித வரி விதிப்போ அல்லது தேவைப்பாடோ முதல் குறிப்பிட்ட அரசில் உட்படுத்தக் கூடாது.

5. 2 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாது, இந்த உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் அனைத்து வகையிலும் விபரங்களிலும் அடங்கும் வரிகள் தொடர்பில் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

**உறுப்புரை 25**

இருவாயினொத்த உடன்பாடு நடைமுறை

1. ஒப்பந்த நாடொன்றில் வதிபவர் ஒருவர் ஒப்பந்த நாடுகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் நடவடிக்கைகளின் விளைவாக இவ்வுடன்படிக்கைக்கு மாறான முறையில் தன் மீது வரி விதிக்கப்படுகின்றது அல்லது வரி விதிக்கப்படலாமெனக் கருதுவாராயின், அவ்வரசுகளின் வரி விதிப்புச் சட்டங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரிகாரங்களைக் கவனத்தில் கொள்ளாது அவர் தான் வதியும் ஒப்பந்த நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் அவரது விடயம் 24 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடங்குமாயின், அவர் வதிபவராகவுள்ள அந்த ஒப்பந்த நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் விளக்கங்களைச் சமர்ப்பிக்கலாம். இவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக அமையாத வரி விதிப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமான செயற்பாடு தொடர்பான முதலாம் அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு வருட காலத்தினுள் அவ்விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2. தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அவ்வாட்சேபனை நியாமானதாக தோன்றியும் தாமாக ஒரு பொருத்தமான தீர்வுக்கு வர முடியாமலும் இருப்பின், அவர் இவ் உடன்படிக்கைக்கு மாறான வகையிலான வரி விதிப்பினைத் தவிர்க்கும் பொருட்டு மற்றைய ஒப்பந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியுடனான இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் அவ்விடயத்தினைத் தீர்த்து வைக்க முயற்சிக்கலாம். எடுக்கப்படும் எந்த உடன்பாடும் ஒப்பந்த நாடுகளின் உள்ளூர்ச் சட்டத்தின் எத்தகைய காலவரையறையினையும் பொருட்படுத்தாது நடைமுறைப்படுத்தப்படும்.

3. இந்த ஒப்பந்தத்தினைப் பொருள்கோடல் செய்வது அல்லது ஏற்புடையதாக்குவது தொடர்பில் ஏதேனும் சிரமங்கள் அல்லது சந்தேகங்கள் தோன்றுமாயின், அவற்றை இருவாயினொத்த உடன்பாட்டின் மூலம் தீர்த்துக் கொள்வதற்கு ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் முயற்சித்தல் வேண்டும். இவ் ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் எதுவும் காணப்படாத சந்தர்ப்பங்களில் இரட்டை வரி விதிப்பினை நீக்குவது தொடர்பில் அவர்கள் கூட்டாகப் பேச்சுவார்த்தை நடாத்துதல் வேண்டும்.

4. மேலேயுள்ள பந்திகளில் கருத்துக்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வரும் நோக்கில் ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் நேரடியாக ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றங்களை செய்து கொள்ள முடியும்.

**உறுப்புரை 26**

தகவல் பரிமாற்றம்

1. இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அல்லது நிருவகிப்பதற்காக இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் தொடர்பில் முரண்படாத உள்நாட்டுச் சட்டங்களை செயற்படுத்துவதுடன் உடன்படிக்கையுடன் தொடர்புபடுகின்றன என அனுமானிக்க முடியுமான தகவல்களை ஒப்பந்த அரசுகளின் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் வேண்டும். தகவல் பரிமாற்றமானது 1 ஆம் மற்றும் 2 ஆம் உறுப்புரைகளினால் கட்டுப்படுத்தப்படமாட்டாது.

2. 1 ஆம் பந்தியின் ஒப்பந்த அரசொன்றுக்கு கிடைக்கும் எந்தவொரு தகவலையும் அந்த அரசின் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அந்தரங்க தகவலாகக் கருதப்படுதல் வேண்டும். 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது மேலே குறிப்பிடப்படாத வரிகளை மதிப்பீடு செய்தல், வரி சேகரித்தல், அவ்வரி முறைமைகளை அமுல்படுத்துதல், வழக்குத் தொடருதல், அவ்வரிகள் தொடர்பான மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தல் என்பவற்றினை (நீதிமன்றங்கள், நிருவாக சபை உள்ளடங்கலான) அவற்றுடன் தொடர்புடைய ஆட்களுக்கு மாத்திரமே வெளிப்படுத்த முடியும், அத்தகைய ஆட்கள் அல்லது அலுவலர்கள் அத்தகைய நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும், அவர்கள் பகிரங்க நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்களில் அலுவல்களை வெளிப்படுத்த முடியும்.

*3. 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஒப்பந்த அரசுகளின் மீது பின்வரும் கடப்பாடுகளை விதிக்குமென எச்சந்தர்ப்பத்திலும் கருதப்படக் கூடாது :-*

*(அ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய அரசின் சட்டங்கள் மற்றும் நிருவாக நடைமுறைகளுடன் வேறுபட்ட வகையில் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.*

*(ஆ) அவ்வொப்பந்த அரசின் அல்லது மற்றைய அரசின் சட்டங்களின் கீழ் அல்லது சாதாரண நிருவாக முறையின் கீழ் பெற முடியாத தகவல்களை வழங்குதல்.*

*(இ) வணிக, வியாபார, கைத்தொழில், வர்த்தக அல்லது தொழில்சார் இரகசியங்களை அல்லது வணிக முறைமை அல்லது அரச கட்டளைக்கு (order public) முரணாக விளங்கக் கூடிய வகையில் ஏதேனுமொரு தகவலை வழங்குதல்.*

*4. இந்த உறுப்புரைக்கு அமைவாக ஒப்பந்த அரசொன்றினால் தகவல்கள் வேண்டப்படுமாயின், மற்றைய ஒப்பந்த அரசு தனது வரி நோக்கங்களுக்காக அத்தகைய தகவல்கள் அவசியப்படாதபோதிலும் வேண்டப்பட்ட தகவல்களைப் பெறுவதற்காக அத்தகவல்களைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முன்னால் குறிப்பிட்ட வாக்கியத்திலுள்ள கடப்பாடு 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்குட்பட்டதாக இருப்பினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த வரையறைகளினூடாக ஒப்பந்த அரசு ஒன்று வெறுமனே அத்தகைய தகவல்கள் தொடர்பில் உள்நாட்டு விடயங்களில் அக்கறையின்மை காரணமாக அத்தகவல்களை வழங்காதிருப்பதற்கான அனுமதியாக அதனைக் கருதக் கூடாது.*

*5. வங்கியொன்றிடம், வேறு நிதி நிறுவனத்திடம் பெயர் குறிப்பீடு செய்யப்பட்ட ஒருவரிடம் அல்லது ஒரு முகவராண்மையில் தொழிற்பட்டு வரும் ஆளொருவரிடம் காணப்படும் தகவல் அல்லது நம்பிக்கைக்குரியவர் என்ற அடிப்படையில் அல்லது அத்தகவல்கள் ஆளொருவரின் உரிமை சார்ந்த நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்ற காரணத்தினால் மாத்திரம் ஒப்பந்த அரசொன்று அத்தகவல்களை வழங்க மறுப்பதற்கு 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் அனுமதிப்பதாக விளங்கிக் கொள்ளக் கூடாது.*

***உறுப்புரை 27***

*இராஜதந்திர தூதுக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பேராளர் பதவிகள்*

*இந்த உடன்படிக்கையின் பகுதியெதுவும் சர்வதேச சட்டத்தின் பொது விதிகளின் கீழ் அல்லது விசேட உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளடங்கும் இராஜதந்திர தூதுக்குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் பேராளர் பதவிகளுக்குரிய நிதி ரீதியான சிறப்புரிமைகளைப் பாதிக்கக்கூடாது.*

***உறுப்புரிமை 28***

*நடைமுறைப்படுத்துதல்*

*1. திருப்திகரமாகவுள்ள இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தமது சட்டத்தினூடாக தேவையான நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஒவ்வொரு ஒப்பந்த அரசும் இராஜதந்திர வழிமுறைகளில் மற்றைய அரசுக்கு அறிவிக்க வேண்டும்.*

*2. இந்த உடன்படிக்கையானது, இவ் அறிவித்தல்களின் பின்னர் அடுத்துவரும் மூன்று மாத காலப் பகுதியின் பின்னர் நடைமுறைப்படுத்தப்படும். இவ் உடன்படிக்கையின் ஏற்பாடுகள்,*

*(அ) பின்லாந்தில்–*

(i) *மூலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வரி தொடர்பில் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியின் பின்னர் வரும் கலண்டர் வருடத்தின் சனவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் எழும் வருமானம் தொடர்பிலும் ;*

(ii) *மற்றைய வருமானத்தின் மீதான வரி மற்றும் மூலதனத்தின் மீதான வரி தொடர்பிலும் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வருடத்தின் பின்னர் வருகின்ற கலண்டர் வருடத்தின் சனவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி அறவிடத்தக்க வருடம் தொடர்பிலும் ;*

(ஆ) இலங்கையில் –

(i) மூலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வரி தொடர்பில் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியின் பின்னர் வரும் கலண்டர் வருடத்தின் ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் எழும் வருமானம் தொடர்பிலும் ;

(ii) இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் கலண்டர் வருடத்தின் ஏப்பிரல் முதலாம் திகதி அல்லது அதற்குப்பின்னர் ஆரம்பிக்கும் எந்தவொரு அரசிறை ஆண்டினதும் வருமானத்தின் மீதான வரிகள் தொடர்பிலும்.

ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு அரசங்கமும் பின்லாந்து குடியரசு அரசாங்கமும் வருமானம் மற்றும் மூலதனம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுப்பதற்காகவும் 1982, மே 18 ஆம் திகதி ஹெல்சிங்கில் (இதனகத்துப் பின்னர் “1982 உடன்படிக்கை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையானது முடிவுறுத்தப்படுவதுடன், இந்த உறுப்புரையின் 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக இந்த உடன்படிக்கையில் பிரயோகிக்கப்படுகின்ற வரிகள் தொடர்பில் செயற்படுத்தப்பட்டுள்ள இந்த உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தப்படும் குறித்த திகதியிலிருந்து செயற்பாட்டுக்கு வரும் வகையில் நிறுத்தப்படுதல் வேண்டும். 1982 ஆம் ஆண்டு உடன்படிக்கையானது இந்த பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கிய வகையில் பயனுறுதியாகியுள்ள திகதியிலுள்ளவாறு முடிவுறுத்தப்படல் வேண்டும்.

**உறுப்புரை 29**

முடிவுறுத்தல்

1. ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசினால் முடிவுறுத்தப்படும் வரையில் இவ் ஒப்பந்தமானது நடைமுறையில் இருத்தல் வேண்டும், ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்தின் பின்னர் வரும் ஏதேனும் ஒரு கலண்டர் வருடம் முடிவடைவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது ஆறு மாதங்களில் அல்லது அதற்கு முன்னர் இராஜதந்திர வழிமுறைகளில் முடிவுறுத்தல் தொடர்பான அறிவித்தலொன்றினை வழங்குவதனூடாக ஏதேனும் ஒரு ஒப்பந்த அரசு இவ் ஒப்பந்தத்தினை முடிவுறுத்த முடியும்.

2. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில்;

(அ) இவ் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்ட கலண்டர் வருடத்தினை அடுத்துவரும் கலண்டர் வருடத்தின் சனவரி மாதம் முதலாம் திகதியன்று அல்லது அதன் பின்னர் எழும் வருமான மூலத்தில் நிறுத்தி வைத்தல் வரி தொடர்பிலும்;

(ஆ) அவ் அறிவித்தல் வழங்கப்பட்ட கலண்டர் வருடத்தை அடுத்துவரும் வருடத்தின் சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் வரி விதிப்பாண்டில் ஈட்டப்பட்ட வருமானத்தின் மீதான மற்றைய வரிகள் மற்றும் மூலதனத்தின் மீதான வரிகள் தொடர்பிலும்

இவ் உடன்படிக்கை ஏற்புடமை முடிவுறுத்தப்படும்.

இதற்கு சாட்சியாக உரியவாறு அதிகாரம் வழங்கப் பெற்ற அதிகாரிகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஒரே சமமான அதிகாரங்களைக் கொண்ட சிங்கள, பொலிஸ், மற்றும் ஆங்கில மொழிகளில் இணைப்பிரதிகளுடன் 2016, ஏப்பிறல் 28 ஆந் திகதியன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. பொருள்கோடலில் முரண்பாடுகள் ஏதேனும் காணப்படுமிடத்து, ஆங்கிலப் பிரதியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

| | |
|---|---|
| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் சார்பில் | பின்லாந்து குடியரசு அரசாங்கம் சார்பில் |

7-797

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.